# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

# MCOP. No.739/2018

2026–ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 05ம் நாள் வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியமாகிய **XW–2 வது** நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி. ஆ. பாப்பாத்தி, கிரேடு–1 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நித்யா | வயது | : | |
| த/பெ (அ) க/பெ | : | | தொழில் | : | |
| ஊர் | : | | வட்டம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஸ்ரீரங்கம் வட்டாரபோக்குவரத்துஅலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரிகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிப்பதற்கு வட்டாரபோக்குவரத்து அலுவலர் எனக்கு வழங்கிய அதிகார கடிதம் சா.சா.ஆ.2, ராம்ஜிநகர் காவல்நிலைய குற்ற எண்.50/2018 வழக்கில் சம்மந்தப்பட்ட TN48 K 6062 என்ற வாகனத்தின் மோட்டார்வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் கொண்டுவந்துள்ளேன். அது சா.சா.ஆ.3, மேற்படி வாகனத்தின் ஓட்டுநருக்கு ஓட்டுநர்உரிமம் இல்லையென்று வழங்கப்பட்ட Check Report நகல் சா.சா.ஆ.4, இனாம் மாத்தூர் என்ற கிராமம் எங்கள் அலுவலக வட்டார எல்லைக்குட்பட்டது தான். எங்கள் அலுவலக பதிவேட்டின் படி மேற்படி கிராமத்தை சேர்ந்த லோகேஸ்வரன் த/பெ.ஜெகதீஸ்வரன் என்பவருக்கு ஓட்டுநர்உரிமம் வழங்கப்படவில்லை. அதற்கான கணினியில் எடுக்கப்பட்ட சான்று நகல் சா.சா.ஆ.5,

**மனுதாரர்கள் தரப்பு குறுக்குவிசாரணை:**

மோட்டார்வாகனஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யப்படவில்லை என்று குறிப்பிடபட்டுள்ளது. சா.சா.ஆ.5 ஆவணத்தின் படி

கணினி மயமாக்கப்படுவதற்கு முன்பு ஓட்டுநர் உரிமம் பெற்றிருந்தால் அந்த விவரம் அதில் இடம்பெறாது என்றால் சரிதான். ஓட்டுநர்உரிமம் புதுபிக்கப்படும்போது அந்த விவரம் இடம்பெறும்.

**மறுவிசாரணை:**

இல்லை.

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.